**போபே போத்தலை பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, போபே போத்தலை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த 2000 லீட்டர் நீர்த் தொட்டிகள் இரண்டினதும் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டின் போது ரூபா 133,187 தொகைக்கான ஊழியர் பிணைவைப்புத் தொகையினை கணக்கீடு செய்திருக்காத தவறினை சரி செய்யும் போது ஊழியர் பிணை முதலீட்டு கணக்கு வரவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியக் கணக்காய்விற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 160,687 தொகைக்கான ஊழியர் பிணை, ஊழியர் பிணை முதலீட்டுக் கணக்கில் வரவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 3,072,858 தொகைக்கான உள்ளுராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்பு தொகை கடன் கொடுத்தோர் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்கள் காணப்படுகின்ற ரூபா 275,926,389 தொகைக்கான 06 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே வித்தியாசங்கள் காணப்பட்டதுடன் அவதானிக்கப்பட்ட சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 1,550,633 தொகையாகும்.

#### 1.3.3 தொங்கல் கணக்கு

2013 ஆண்டு முதல் தீர்க்கப்படாதிருந்த ரூபா 761,993 தொகைக்கான தொங்கல் கணக்கில் வரவு மீதியை இனங்கண்டு, கணக்குகளை தீர்த்திருக்கவில்லை.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**பெற வேண்டிய கணக்குகள்**

(i) கடந்த பல வருட காலம் முதல் முன்கொண்டு வரப்பட்டுள்ள கூட்டுப் பெறுமதி ரூபா 39,493,245 தொகைக்கான 04 கணக்கு மீதிகளை தீர்த்துக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டு இறுதித் திகதியன்று உள்ளவாறு ரூபா 10,133,353 தொகைக்கான பெறவேண்டிய மூலதன உதவிநிதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

முற்பணக் கணக்கில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீதி ரூபா 105,764 இற்கான வரவு மீதியாக்குவதாக உரிய கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 168,364 தொகை தொடர்பாக சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571(1)(2) | கூட்டுத்தொகை ரூபா 8,506,976 தொகையான காலங் கடந்துள்ள 237 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. |
| (ii) நிதிப்பிரமாணங்கள் 1645 மற்றும் 1646 | சபை வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. |
| (ஆ) 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை பந்தி 3.1 | சபையின் வாகனங்கள் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்திருக்கவில்லை. |
| (இ) 2010 திசெம்பர் 27 திகதிய தபாபா/பபாகோ/2010/01 இலக்கம் கொண்ட தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பந்தி 05 | வர்த்தக கடைகளுக்கான அனைத்து உடன்படிக்கைகளும் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டும் எனினும், 2014 இன் பின்னர் கடைகளுக்கான உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்பட்டி ருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 31,757,820 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 66,337,870 ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

சபையினால் பேணப்படுகின்ற 03 வங்கி நடைமுறை கணக்குகளில் காணப்பட்ட மொத்த சராசரி மாதாந்த மீதி ரூபா 4,061,219 தொகையினை முதலீடு செய்து, மேலதிக வருமானம் உழைத்தல் தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 மதிப்பீட்டு வருமனம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பீட்டு வருமனம் | 2016 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2016 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 15,300,000 | 11,753,478 | 11,582,072 | 36,484,857 | 13,900,000 | 12,198,708 | 11,008,920 | 31,745,966 |
| வாடகை | 3,892,000 | 4,972,324 | 5,331,561 | 2,790,757 | 3,797,000 | 4,929,523 | 4,936,653 | 1,898,897 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 502,000 | 576,800 | 718,276 | 4,750 | 452,000 | 325,177 | 529,385 | 71,548 |
| ஏனைய வருமானங்கள் | 30,871,000 | 29,554,129 | 15,553,622 | 28,886,360 | 32,281,000 | 55,647,800 | 16,850,857 | 14,885,853 |
| | 50,565,000 | 46,856,731 | 33,185,531 | 68,166,724 | 50,430,000 | 73,101,208 | 33,325,815 | 48,602,264 |

#### 2.3.2 வீதவரி மற்றும் வரி

மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டுகளுக்கு உரிய அறவிடப்பட வேண்டிக் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 43,499,444 தொகைக்கான வீதவரி தொகையில் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தது 27 சதவீதம் அளவு குறைந்த பெறுமதியே. இதன் காரணமாக வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவைத் தொகை வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 4,738,891

இனால் அதிகரித்திருந்த போதிலும், நிலுவை வீதவரியை அறவீடு செய்வதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.3 கடை வாடகை**

மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 6,871,221 தொகை கடை வாடகையில் ஆண்டின் போது அறவீடுகள் 78 சதவீதம் ஆகும். நிலுவைக் கடை வாடகையை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.4 ஏனைய வருமானங்கள்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 44,439,982 தொகை குத்தகை மற்றும் தண்டம் ரூபா 15,553,662 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட மீதி ரூபா 28,886,360 தொகையாகும்.

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 123,364,461 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,524,168 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பாக கருமங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

ஆக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிக் காணப்பட்ட செய்பணிகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அறிந்திருக்காமையால் அந்த குறிக்கோளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேச மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 மனித வள முகாமைத்துவம்**

(அ) வெற்றிடமாகக் காணப்பட்ட 18 பதவிகளுக்காக பதவியணியினர் சேர்ப்பதற்கு 28 மிகைப்பதவியணியினை முறைப்படுத்துவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையினால் அமைய, தற்காலிக பிரதியீட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது சம்பளப் படிகளாக ரூபா 4,997,624 இற்கான தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சபையின் ஆரம்ப தொகுதியைச் சேர்ந்த 05 தொழிலாள ஊழியர்களுக்கு முகாமைத்து சேவையின் கடமைகள் சாட்டப்பட்டிருந்ததுடன், இரண்டாம் மூன்றாம் தர ஊழியர்களுக்கும் முறைப் பிரகாரம் கடமைகள் சாட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையில் கடமையாற்றிய 24 ஊழியர்களிடம் 10 வருடங்களை மிகையான காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 521,549 இற்கான கடன் மீதியை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 2017 ஆண்டிற்காக சமூக அபிவிருத்தி பெண் உத்தியோகத்தருக்கு செலுத்தியிருந்த ரூபா 537,393 தொகையான சம்பளம் மற்றும் படிகள் 2017 திசெம்பர் 31 வரை உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து மீளளிப்பு செய்து கொண்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டுத் திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கலேகான பொதுச் சந்தையின் 11 கடைகள் 2000 ஆண்டு முதல் சேதமடைந்திருந்தமையால் 17 வருடங்கள் மூடப்பட்டிருந்ததுடன், இந்த கடைகளை பழுதுபார்த்து வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) அனைத்து கடைகளுக்குமுரிய உடன்படிக்கைகள் 2014 ஆண்டின் பின்னர் புதுப்பிக்கப்பட்டிருக்காததுடன், அதன் காரணமாக ரூபா 163,750 தொகைக்கான நிலுவைத் தொகை மற்றும் ரூபா 15,925 இற்கான தண்டப்பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 விளைவற்ற/ குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

சபைக்குச் சொந்தமான ரூபா 692,315 தொகை பெறுமதியான 02 டிரக்டர்கள் மற்றும் நீர் பவுசர் ஒன்று 12 வருடங்களை விட மிகையான காலம் முதல் செயற்படாமல் காணப்பட்டது.

**3.4.2 வாகனப் பயன்பாடு**

சபைக்குச் சொந்தமான முச்சக்கர வண்டி 2017 ஏப்ரல் 28 திகதியின் பின்னரான 4620 கிலோ மீற்றர் ஓட்டத்திற்குரிய ஓட்ட அட்டவணைகளை சமர்பித்திருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 07 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 25,291,282 தொகைக்கான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன் அப்பெறுமதி 10 சதவீதம் முதல் 86 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 02 செலவு விடயங்களின் மதிப்பீட்டு ஏற்பாட்டு எல்லையை மிகைத்து ரூபா 1,000,659 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அப்பெறுமதி 207 சதவீதம் மற்றும் 971 சதவீதமாக காணப்பட்டது.

(இ) 04 வருமான விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 5,419,989 தொகையாக இருந்ததுடன், அப்பெறுமதி 0.24 சதவீதம் முதல் 27 சதவீதம் இடையே வீச்சில் காணப்பட்டது.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 ஜூன் 09 ஆம் திகதி DMA/2009(i), இலக்கம் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு மற்றும் பதிவேடு களைப் பேணல் | (i) | முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டு வரும் மீதிகளை தீர்த்திருக்காமை. |
| | | (ii) | முற்பணப் பதிவேடு நாளதுவரை ஆக்கியிருக்காமை. |
| | | (iii) | பல வருட காலமாக முன்கொண்டு வந்துள்ள தொங்கல் கணக்கில் மீதியை தீர்த்திருக்காமை. |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் | (i) | நிர்மாணிக்கப்பட்டிருந்த சொத்துக்களை அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த கட்டிடங்களின் பெறுமதியில் கணக்கீடு செய்திருக்காமை. |
| | | (ii) | பயன்படுத்தப்படாத வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு முறையான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தாமை. |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | நிலுவை வருமானம் தொடர்பாக காலப்பகுப்பாய்வு தயாரித்திருக்காமை. |
| | | (iii) | இறைச்சிக் கடை வாடகை அறவீடு செய்வதற்கு முறைப்பிரகாரம் செயற்படாமை. |
| (ஈ) | பதவியணி முகாமைத்துவம் | (i) | மிகைப் பதவியணியை முறைப்படுத்து வதற்கும் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) | 2007 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்டு காணப்படும் ஊழியர் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | பாதீட்டு கட்டுப்பாடு | (i) | மதிப்பீட்டு இலக்குகளை நெருங்கி இருக்காமை. |
| | | (ii) | பாதீடு தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொண்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |